18th July 1957]

Wage Board for Press Workers

* 137 *Q.*—SRI M. P. SUBRAMANIAM (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to constitute a Wage Board for the Press Workers ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI S. B. ADITYAN : அச்சுத் தொழிலாளர்களுக்கு " வேஜ் போர்டு " நியமிக்கப் போவதில்லை என்று சொன்னார்கள். அவ்விதம் இல்லை யென்றால் " வேஜ் போர்டு " ஆக்டின்படி குறைந்தபட்ச கூலியாவது நிர்ணயிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அச்சுத் தொழிலாளர்களுக்கு சில " அட்ஜூடிகேஷன் " தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த தீர்ப்பை எல்லா இடங்களிலும் அமல் செய்வார்கள் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறது. அவ்விதம் இல்லையென்றால் குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்க வேண்டுமென்று அதிகமான புகார்கள் வந்தால் சர்க்கார் அதைப்பற்றி யோசிக்கும்.

SRI V. K. KOTHANDARAMAN : அட்ஜூடிகேஷன் தீர்ப்பை சரியாக அமல் செய்யாமல் இருப்பதினால் இவர்களுக்கு விரைவில் ஒரு வேஜ் போர்டு ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இல்லை.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, ஓரளவு கல்வித்திறன் பெற்று திறமையோடு பணியாற்றவேண்டியிருக்கிற காரணத்தினாலும் அவர்கள் ஒரே இடத்தில் நிரந்தரமாக பணியாற்ற முடியாத நிலைக்கு அவர்களுக்கு கொடுக்கப்படும் ஊதியம் இருப்பதினாலும் அடிக்கடி வேறு இடங்களுக்கு மாறி செல்ல வேண்டிய நெருக்கடியான நிலை இருப்பதினாலும் இரவு நேரங்களில் கடுமையாக உழைக்க வேண்டியிருப்பதினாலும் இவ்வித மான துன்பமான நிலையில் இருக்கும் அவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் நிரந்தரமாக கிடைக்க சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் ஆதித்தன் அவர்களின் கேள்விக்குப்பதில் சொன்னேன். கூடிய மட்டும் எல்லா முதலாளிகளும் அட்ஜூடிகேஷன் தீர்ப்புப்படி ஊதியம் கொடுப்பார்கள் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறது. இவ்விதம் கொடுக்கப்படவில்லை என்று தொழிலாளர்களிடமிருந்து அதிகப்படியான குறைகள் வரும்போது அந்த சமயத்தில் அதுப்பற்றி கவனிக்கப்படும்.

SRI P. S. CHINNADURAI : சபாநாயகர் அவர்களே, கோவை அச்சகத் தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து உடனடியாக இப்போது தொழிலாளர்கள் பெறுகிற சம்பளத்தோடு 25 சத விகிதம் அதிகரித்து கொடுக்கவேண்டுமென்றுள்ள கோரிக்கையை எல்லா அச்சக முதலாளிகளுக்கும், அதன் நகல் அரசாங்கத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் கொடுக்கப்பட்ட கோரிக்கையின் மீது பரிசீலனை செய்து உடனடியாக அமைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து அதை அமல் செய்ய அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : சாதாரணமாக தனித்தனி இடங்களிலிருந்து பலவிதமான குறைகள் வந்துகொண்டிருக்கின்றன. அவை அட்ஜூடிகேஷனுக்கு விடப்படுகின்றன. மாகாண ரீதியாக குறைகள் இருக்குமானால் அதற்கு ஒரு முடிவு ஏற்படுத்த வேஜ் போர்டுக்கு அனுப்பப்படுகிறது. வேஜ் போர்டு செய்யும் முடிவு யாரையும் பாதிக்காது. இதனால் இதை உபயோகப்படுத்துவதற்கு சர்க்கார் இஷ்டப்படவில்லை.

[18th July 1957

SRI M. P. SUBRAMANIAM : தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய ராஜ்யத்தில் அச்சுத் தொழிலாளர்களுக்கும் மானேஜ்மெண்டாருக்கும் அதிகமான தகராறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதினால் பல தகராறுகள் இப்பொழுது அட்ஜுடிகேஷனுக்கோ அல்லது கன்ஸிலியேஷனுக்கோ விடப்பட்டிருக்கின்றன. அப்படி விடப்பட்டவைகள் சுமார் எவ்வளவு என்று கூறமுடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு நோட்டீஸ் வேண்டும்.

Wage Board for Cigar Workers

* 138 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to constitute a Wage Board for Cigar Workers ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : மாகாண ரீதியில் எங்கும் " ஸிகார் " தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் தகராறு ஏற்பட்டுக் கொண்டிடிருப்பதால் ஸிகார் பாக்டரி தொழிலாளர்களுக்கு அவர்களுடைய கூலியை நிர்ணயம் செய்ய ஒரு போர்டு ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : வேஜ் போர்ட் ஏற்படுத்துவதற்கும் குறைந்த பட்சக் கூலி நிர்ணய போர்டு ஏற்படுத்துவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. வேஜ் போர்டு தீர்மானிக்கிற முடிவுகளை யாரும் அமல் செய்யவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆகவே இம்மாதிரி வேஜ் போர்டு அமைப்பது நல்லதல்ல என்று சர்க்கார் கருதுகிறது. வேஜ் போர்டின் முடிவு வந்த பிறகுதான் தகராறு ஆரம்பிக்கிறது. ஆகவே வேஜ் போர்டு ஏற்படுத்த இப்போது முடிவு செய்யப்படவில்லை என்று என்னுடைய பதிலில் சொல்லியிருக்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, சுருட்டுத் தொழிலாளர்களாகப் பணியாற்றுகின்றவர்களின் உழைப்பின் பலனை முதலாளிகள் சுருட்டுகிறார்கள் என்கின்ற குறை நாட்டில் எங்கு பார்த்தாலும் இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிக்க conciliati n மூலமாகவோ அல்லது அட்ஜுடிகேஷன் (adjudication) மூலமாகவோ தீர்மானித்து அமுல் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பீடித் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி கொடுக்கப்பட வேண்டும் என்று ஒரு போர்டு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த சுருட்டு தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயிக்க ஒரு போர்டு அவசியமா என்பதைப் பற்றி சர்க்கார் ஆலோசிக்கும்.

SRI T KARIA GOUNDER : தலைவர் அவர்களே, பீடித்தொழிலாளர்களுக்கு இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். இது மாகாண ரீதியில் எல்லா தொழிலாளர்களுக்கும் அந்த கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறியவேண்டுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போதுதான் பீடித் தொழிலாளர்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது மாகாண ரீதியில் சரியாக நடைபெறும் என்றே நம்புகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : பீடித் தொழிலாளர்களுக்கு என்று அமைத்திருக்கிற போர்டைக் கொண்டே சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்க சர்க்கார் முன் வருமா ?